அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.330

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.07
24 ஜூன், 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்!

## நிருவாகத்தில் தொழிலாளர் பிரதிநிதிகள்-அமைச்சுக்களில் உதவிச் செயலாளர் (இ.நி.சே.ஐச் சேராத) பதவிகள்

14-06-1979 ஆம் திகதிய 315ஆம் இலக்க நாபனச் சுற்றறிக்கையுடன் தொடர்புடையது.

02. 01-மே 1986 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிருவாகத்தில் தொழிலாளர் பிரதிநிதிகளை - அமைச்சுக்களின் உதவிச் செயலாளர்களை (இ.நி.சே. ஐச் சேராத) சேவையில் அமர்த்தும் நிபந்தனைகள் கீழ்க்காணுமாறு அமையும்.

(அ) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அத்துடன் மூன்று வருட திருப்திகரமான சேவையின் பின்னர் 1956-இன் 33-ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் பேரில் நியமனம் பெறுபவர் சேவையில் உறுதிப் படுத்தப்படுவார். அத்துடன்,

(ஆ) அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டவரான அமைச்சின் உதவிச் செயலாளர் ஒருவர் (நிருவாகத்தில் தொழிலாளர் பிரதிநிதி)

(i) அவர் உதவிச் செயலாளராகப் பதவி வகிக்கும் அமைச்சுக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருக்கு அவசியமற்றவராயும், அல்லது

(ii) வேறு ஓர் அமைச்சில் இதற்கொப்பானதொரு பதவியில் நியமித்தற்கு முடியாதவர், அல்லது

(iii) தாம் முன்னர் வகித்த பதவிக்கு மீளச் செல்லுதற்கு விரும்பாதவருமாயிருந்தால்

அத்தகைய சந்தர்ப்பத்தில் 17-04-1979-ஆம் திகதியையும் 136-ஆம் இலக்கத்தையுமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஆ(1)-ஆம் வகுதியின ஏற்பாடுகளின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எதுவுமின்றி ஓய்வு பெறுதற்கு அவருக்கு சந்தர்ப்பமளிக்கும் வகையில் செயல்படுதல் வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,